# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1954/43 - 2016 පෙබරවාරි මස 19 වැනි සිකුරාදා - 2016.02.19

*1954/43 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 21/78*

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

27 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, 1999 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ஆந் திகதிய 1093/8 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தினை தாபிப்பது தொடர்பில் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையை அதற்கான அட்டவணையில் பின்வருமாறு இக்கட்டளை மூலம் திருத்துகின்றேன் :-

1. அதன் நிரல் 1 இல் கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட "முகாமைத்துவ பீடம்" என்னும் பதிவிற்கு நேரொத்ததான நிரல் 2 இல் காணப்படும் "உயிரியல் நுட்பவியல் துறை" என்னும் விடயத்தினை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தினைச் சேர்ப்பதன் மூலம் :-

   "உயிர்த்தொகுதிகள் பொறியியல் துறை"

2. நிரல் 1 இல் காணப்படும் "கால்நடை, கடற்றொழில் மற்றும் போசாக்கு பீடம் என்னும் பதிவையும் அதன் 2 ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவையும் உடனடுத்துப் பின்வருவதனை சேர்ப்பதன் மூலம் :-

| நிரல் 1 | நிரல் 2 |
|---|---|
| மருத்துவ பீடம் | உடற்கூற்றியற் துறை ;<br>உளவியற் துறை;<br>உயிரியல் இரசாயனத் துறை;<br>அறுவை சிகிச்சைத் துறை ;<br>மகப்பேற்றியல் மற்றும் பெண்ணோயியற் துறை ;<br>குழந்தை மருத்துவத் துறை ;<br>மனநோய் சிகிச்சைத் துறை ;<br>சமூக மருத்துவம் மற்றும் குடும்ப மருத்துவத் துறை ;<br>மருத்துவத் துறை<br>நோயியற் துறை ; |

| *நிரல் 1* | *நிரல் 2* |
|---|---|
| | மருந்தாக்கவியற் துறை ;<br>நுண்ணுயிரியற் துறை ;<br>தடயவியல் மருத்துவத் துறை ;<br>ஒட்டுண்ணியியற் துறை ;<br>மருத்துவக் கல்வித் துறை ; ”. |

லக்ஷ்மன் கிரியெல்ல,
உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர்.

கொழும்பு,
*2016, பெப்புருவரி 16.*

*3- 183*